செ.வெ.எண்:20 நாள்:10.06.2019

**கரூர் மாவட்டம்**

**மக்கள் குறை தீர்க்கும் நாளில் மனு அளிக்க வந்த பொதுமக்களுக்கும், அனைத்துத்துறை அலுவலர்களுக்கும் துணிப்பைகளை ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்**

கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (10.06.2019) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, கணவனால் கைவிடப்பட்டோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, வீட்டுமனைப்பட்டா, வேலைவாய்ப்பு, காவல்துறை நடவடிக்கை, புதிய குடும்ப அட்டை, கல்விக்கடன், தொழில் கடன், குடிநீர் வசதி, சாலை வசதி, அடிப்படை வசதிகள் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து மொத்தம் 271 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்றுக்கொண்டு பரிசீலித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவு மனுக்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் முகாம் மனுக்கள் மீது தனிக்கவனம் செலுத்தி உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் மனுநீதி நாள் முகாம் மனுக்கள், மாவட்ட உயர் அலுவலர்களின் மனுநீதி நாள் முகாம் மனுக்கள், மக்களைத்தேடி வருவாய்த்துறை அம்மா திட்ட மக்கள் குறை தீர்க்கும் முகாமில் பெறப்பட்ட மனுக்கள் ஆகியவற்றின் மீது உரிய விசாரணை மேற்கொண்டு காலதாமதம் இல்லாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

மேலும், பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டை தவிர்க்கும் வகையிலும், அனைவரும் துணிபைகளை பயன்படுத்த வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும், சுற்றுச்சூழலை மேம்படுத்தும் வகையிலும் கரூர் ரோட்டரி சங்கத்தின் சார்பில் வழங்கப்பட்ட துணிப்பைகளை மக்கள் குறை தீர்க்கும் நாளான இன்று (10.06.2019) மனு அளிக்க வந்த பொதுமக்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், இக்கூட்டத்திற்கு வருகைதந்த அனைத்துத்துறை அலுவலர்களுக்கும் துணிப்பைகளை வழங்கினார். பிளாஸ்டிக் பொருட்களுக்கு தமிழக அரசு விதித்துள்ள தடைகுறித்தும், பிளாஸ்டிக் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்தும் அனைவரிடமும் மாவட்ட ஆட்சியர் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) திருமதி செல்வசுரபி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி.லீலாவதி, கலால்துறை உதவி ஆணையர் திருமதி.மீனாட்சி, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர் திருமதி.ஜான்சி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.கணேஷ், ரேட்டரி சங்கத்தின் தலைவர் திரு.முரளி, செயலாளர் திரு.இராமாசாமி, பொருளாளர் திரு. கோவிந்தராஜ் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**